**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.952/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 2 |
| Name | : | ஆவுடையம்மாள், வயது 70 |
| Father Name/Husband Name | : | பாலகிருஷ்ணன் |
| Village | : | பீக்கிலிபட்டி |
| Taluk | : | எட்டயபுரம் |
| Calling | : | ஆடு மேய்த்தல் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17$^{th}$day of March 2026.

**(Accused present.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பீக்கிலிபட்டியில் வசித்து ஆடு மேய்த்தல் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது கொழுந்தன் மகன். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஐந்தாவது மாதம் தேதி ஞாபகம் இல்லை ஒரு நாள் காலை 07.15 மணிக்கு எங்களுடைய பழைய வீட்டிலிருந்து கழிவு நீரை நான் கொண்டு வந்தபோது ஆஜர் எதிரி என்னை பார்த்து தேவடியா மகளே, புண்டைய மகளே என்று அசிங்கமாக திட்டி, சேலையை பிடித்து தள்ளிவிட்டு நான் ரோட்டில் விழுந்து விட்டேன். பின்னர் மூச்சு பேச்சு இல்லாமல் இருந்தேன். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் என்னை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கா அழைத்து சென்றார்கள். ஆஜர் எதிரி அவராக கையை அறுத்து கொண்டு மருத்துவமனைக்கு சென்றார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. அரசு மருத்துவமனைக்கு எதிரிதான் முதலில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். நாங்கள் சிகிச்சைக்கு ஆம்புலன்ஸில் வந்து சேர்ந்தபோது காலை 08.00 முதல் 08.30 மணி இருக்கும். போலீசார் மருத்துவமனையிலேயே இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள் ஆனால் நான் புகார் கொடுக்கவில்லை. போலீசார் என்னிடம் எழுதி கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். போலீசார் எதிரியிடமும் விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் மூச்சுபேச்சு இல்லாமல் ஒரு நாள் முழுவதும்

மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அதனால் மறுநாள்தான் நானும், எனது கணவரும் பேசினோம் என்றால் சரியல்ல.

3. நான், எனது கணவர் ஆகியோர் சேர்ந்து எதிரியின் இடது கையில் அரிவாளால் வெட்டி, நான் கல்லால் எதிரியின் நெற்றியில் அடித்து, எனது மகன் பாலமுருகன் எதிரியை கம்பால் அடித்தான் என்றால் சரியல்ல. எதிரிக்கு அதிக காயம் இருந்ததால் அவர் உடனடியாக மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரியல்ல. எங்களுக்கு நாங்களே காயம் ஏற்படுத்திவிட்டு எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் பொய் புகார் கொடுப்பதற்கு வேண்டி 108 ஆம்புலன்ஸில் வந்தோம் என்றால் சரியல்ல. விஜயகுமார் மற்றும் மதன்குமார் எனது பேரன்கள்.

4. நாங்கள் மருத்துவமனைக்கு சேர்ந்த மறுநாள் இரவு விஜயகுமார் மற்றும் மதன்குமார் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றாலும், எனது கணவரை பார்க்க வந்தார்கள் என்றாலும் சரியல்ல. அவர்கள் இருவரும் எதிரியை மருத்துவமனையில் வைத்து அடித்ததாக கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனது சேலையை பிடித்து, இழுத்து கீழே தள்ளிவிட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி தாக்கியதால் எனக்கு மூச்சுபேச்சு இல்லாமல் போனதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நாங்கள்தான் எங்கள் குடும்பத்துடன் சேர்ந்து எதிரியை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது நாங்கள்தான் எதிரியை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எதிரி என்னை அசிங்கமாக திட்டினார் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.